போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 7, 1922.

ந. 4(2).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் மார்ச்சு மீ 7உ. [விலை, 6 பை.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம் வருஷம் ஜனவரி மீ 3உ கவர்னரவர்களாலும் 1922-ம் வருஷம் பெப்ரவரி மீ 8உ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. III OF 1922.

1922-ம் வருஷத்து 3-வது ஆக்ட்.

AN ACT TO GIVE PROTECTION TO CERTAIN CLASSES OF TENANTS IN THE CITY OF MADRAS.

சென்னை ராஜதானிப்பட்டணத்திலுள்ள சில வகுப்புகளைச் சேர்ந்த குடிக்கூலிக்கிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஆக்ட்.

சென்னை ராஜதானிப்பட்டணத்தின் அனேக பாகங்களில் நிலத்துக்கு நியாயமான வாடகை தாங்கள் செலுத்திவருகிறவரையிலே (அதிலிருந்து) வெளிப்படுத்தப்படமாட்டார்களென்னும் நம்பிக்கையுடன் பிறருடைய நிலங்களில் கட்டிடங்கள் கட்டியிருக்கிற குடிக்கூலிக்கிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாயிருக்கிறபடியாலும், இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதி பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும், பிரயோகமும்.

1. (1) இந்த ஆக்டை, சென்னை ராஜதானிப்பட்டணத்தில் குடிக்கூலிக்கிருப்பவர்களின் பாதுகாப்பைக்குறித்த 1921-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது சென்னை ராஜதானிப்பட்டணத்துக்கு வியாபிக்கும்.

(3) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குமுன் செய்துகொள்ளப்பட்ட நிலக்குடிக்கூலி ஏற்பாடுகளுக்கு மாத்திரமே இந்த ஆக்ட் பிரயோகப்படும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்—

(1) 'கட்டிடம்' என்பதில் கல்கட்டிடமாகவாவது செங்கல், மரம், சேறு, உலோகம் அல்லது வேறே எந்த வகையையாகிலும் சேர்ந்த சாமானைக்கொண்டாவது கட்டப்பட்டிருக்கும் யாதொரு வீடு, வெளிப்புறத்து வீடு, லாயம், மலஜலபாதை மறைவிடம், கொட்டகை, குடிசை என்பவைகளும், அப்படிப்பட்ட வேறே யாதொரு கட்டுக்கோப்பு என்பதும் அடங்கும்.

(2) 'நிலம்' என்பதில் கட்டிடங்கள் என்பவை அடங்கமாட்டா.

(3) 'நிலச்சுவான்தார்' என்பது யாதொரு நிலத்துக்குச் சொந்தக்காரராயுள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாவதுமல்லாமல், தமக்காகவேயாகிலும் வேறே யாதொரு நபரின் சார்பாக அல்லது அவருடைய பிரயோசனத்துக்காகவாகிலும், சொந்தக்காரரிடத்திலிருந்தாயினும் அவருக்கு முந்தி உரிமைபெற்றிருந்தவரிடத்திலிருந்தாயினும் ட்ரான்ஸ்பர் பெற்றிருப்பதையோ தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டின் உத்தரவையோ அல்லது சட்டத்தின் யாதொரு நிபந்தனையையோ அனுசரித்தாகிலும் அந்த நிலம் முழுவதுக்குமாவது அதன் யாதொரு பாகத்துக்காவது வாடகை வசூல்செய்ய பாத்தியதையுள்ள ஒவ்வொரு நபர் என்பதும் அதில் அடங்கும்.

(4) 'குடிக்கூலிக்கிருப்பவர்' என்பது - நிலத்துக்கு வாடகை செலுத்துவதற்குட்பட்டு அந்த நிலத்தில் குடிக்கூலிக்கிருப்பவர் என்றும் அவரிடத்திலிருந்து உரிமை பெறும் வேறே ஒவ்வொரு நபர் என்றும் அர்த்தமாவதுமல்லாமல், குடிக்கூலி ஏற்பாடு முடிந்து போனபிறகும் அந்த நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நபர்கள் என்பதும் அதில் அடங்கும்.

அப்புறப்படுத்தப்படுவதன்மேல் பிரதிபலன் கொடுக்கப்பெறுவது.

3. (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்படுவதன்மேல், குடிக்கூலிக்கிருக்கும் ஒவ்வொருவரும் - தம்மாலாவது, தமக்கு முந்தி உரிமையடைந்திருந்தவர்கள் எவர்களாலாவது ஷை நபர்களில் ஒருவரிடத்திலிருந்து பாத்தியதையடைந்து அப்புறப்படுத்தப்படும் காலத்தில் (பிரஸ்தாப கட்டிடத்தை) அனுபவித்துக்கொண்டிராத யாதொரு நபராலாவது கட்டப்பட்டிருக்கக்கூடியதாய், ஏற்கனவே பிரதிபலன் கொடுக்கப்பட்டிராத யாதொரு கட்டிடத்தின் விலைமதிப்புத் தொகையைப் பிரதிபலனைப் பெறுவதற்கு பாத்தியதையுடையவராவார். யாதொரு கட்டிடத்தின் விலைமதிப்புத் தொகைக்குப் பிரதிபலன் பெற பாத்தியதையுள்ள குடிக்கூலிக்கிருப்பவருக்கு, அந்த நிலத்தில் அவர் வைத்திருக்கக்கூடிய மரங்களின் விலை மதிப்புத் தொகையும் கொடுக்கப்படவேண்டும்.

அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியங்களைப் பைசல்செய்வது.

4. (1) அப்புறப்படுத்துவதுசம்பந்தமாய்க் குடிக்கூலிக்கிருப்பவருக்கு விரோதமாகத் தொடரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்தில் நிலச்சுவான்தார் ஜயமடைந்தால், அதில் கோர்ட்டார் - 3-வது பிரிவின்படி கொடுக்கத்தக்க பிரதிபலன் தொகை ஏதாகிலும் இருந்தால் அதை நிச்சயித்தறியவேண்டும்; மேலும், அந்தப்படி கொடுக்கவேண்டியதாய் ஏற்படும் தொகையை வியாஜ்ஜியத்தைச் சேர்ந்த டிக்ரியில் நிர்ணயித்து, டிக்ரியின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக நிலச்சுவான்தார் அந்தப்படி கொடுக்கவேண்டியதாய் ஏற்பட்ட தொகையைக் கோர்ட்டாரிடத்தில் செலுத்துவதன்மேல், நிலத்தை அதன்மேலுள்ள கட்டிடம் மரங்கள் ஆகிய இவை சகிதமாக நிலச்சுவான்தாரின் சுவாதீனம் செய்யும்படி குடிக்கூலிக்கிருப்பவருக்கு அதில் கட்டளையிட்டிருக்கவேண்டும்.

(2) 1882-ம் வருஷத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 41-வது பிரிவின்படிக்கான ஒரு விண்ணப்பத்தின் விஷயத்தில் நிலச்சுவான்தார் ஜயமடைந்தால், கோர்ட்டார்—3-வது பிரிவின்படி கொடுக்கத்தக்க பிரதிபலன் தொகையை நிச்சயித்தறிந்து, அந்தப்படி கொடுக்கவேண்டியதாய் ஏற்படும் தொகையை நிர்ணயித்து இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பித்து, ஷை இடைக்கால உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் நிலச்சுவான்தார் அந்தப்படி கொடுக்கவேண்டியதாய் ஏற்பட்ட தொகையைக் கோர்ட்டாரிடத்தில் செலுத்துவதன்மேல், 1882-ம் வருஷத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 43-வது பிரிவில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் உத்தரவு பெற நிலச்சுவான்தார் பாத்தியதையுடையவராவாரென்று அதில் காணவேண்டும்.

1882-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

1882-ம் வருஷத்து 15-வது ஆக்ட்.

(3) ஷை வியாஜ்ஜியத்திலாவது விண்ணப்பத்தின் விஷயத்திலாவது, குடிக்கூலிக்கிருப்பது சம்பந்தமாய் வாடகைக்காகவாகிலும் மற்றப்படியாகிலும் குடிக்கூலிக்கிருப்பவர் நிலச்சுவான்தாருக்குப் பணத்தொகை ஏதாவது பாக்கியாயிருப்பதாகக் கோர்ட்டாருக்குத் தெரியவந்தால், கோர்ட்டார் - அந்தத் தொகையைச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரமாகிலும் (2) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரமாகிலும் கொடுக்கவேண்டியதாய் ஏற்படும் தொகைக்கு எதிராகக் காட்டி, அந்தப்படி காட்டப்பட்ட தொகை போக குடிக்கூலிக்கிருப்பவருக்கு பாக்கியாயிருக்கும் ஏதாவது தொகை அப்புறப்படுத்தப்படுவதன்மேல் அவருக்குக் கொடுக்கத்தக்கதாகுமென்று கண்டு ஒரு டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

(4) கொடுக்கவேண்டியதாய் ஏற்பட்ட தொகையானது (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான டிக்ரி அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான இடைக்கால உத்தா

வின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் கோர்ட்டாரிடத்தில் செலுத்தப்படாவிட்டாலும், 6-வது பிரிவின்படி விண்ணப்பம் எதுவும் செய்துகொள்ளப்படாவிட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பம் தள்ளுபடியாவதுமல்லாமல், அந்தப்படி தள்ளிவிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருஷகாலம் வரையில் அப்புறப்படுத்துவதற்காக புதிதாய் வியாஜ்ஜியம் தொடரவாகிலும் சுவாதீனம் பெறுவதற்காக புதிதாய் விண்ணப்பம் செய்துகொள்ளவாகிலும் நிலச்சுவான்தாருக்கு பாத்தியதையும் கிடையாது.

4-வது பிரிவின்படி தீர்மானிக்கப்படத்தக்க பிரதி பலனை நிச்சயிப்பது.

5. (1) 4-வது பிரிவின்படி தீர்மானிக்கப்படத்தக்க பிரதி பலனானது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவின் தேதியில் பிரஸ்தாப கட்டிடம், மரங்கள் ஆகிய இவைகளின் விலைமதிப்பாகும்.

(2) ௸ விலைமதிப்பை நிச்சயிக்கையில், கோர்ட்டார்-அதே மாதிரியான கட்டிடம் கட்டுவதற்குப் பிடிக்குமென்று மதிப்பிடப்பட்ட செலவுத் தொகையையும், விலைமதிப்பில் ஏற்படும் குறைவுக்காகக் கழித்துக் கொடுக்கவேண்டிய தொகையையும், மராமத்துகள் செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

(3) குடிக்கூலிக்கிருப்பவர் உத்தரவாதியாயிருக்கும் யாதொரு காரணத்தினால், எந்தக் கட்டிடத்துக்காகப் பிரதிபலன் கொடுக்கும்படி 4-வது பிரிவின்பிரகாரம் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் கட்டிடமானது டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவின் தேதிக்கும் அப்புறப்படுத்தப்படும் தேதிக்கும் இடையில் அழிந்துபோய்விட்டாலும் மதிப்பில் குறைந்துபோய்விட்டாலும், கோர்ட்டார் - நிலச்சுவான்தார் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரதிபலன் எதுவும் செலுத்தப்படாமலாகிலும் கட்டிடத்தை மீண்டும் மதிப்பிடுவதன்மேல் நிச்சயிக்கப்படும் தொகை செலுத்தப்படுவதன்மேலாகிலும், அவருக்கு (கட்டிடத்தை) சுவாதீனப்படுத்தவேண்டுமென்று கண்டு உத்தரவு பிறப்பிக்கலாம்.

வாடகையை நிச்சயிப்பது.

6. (1) 4-வது பிரிவின்படி டிக்ரியாவது இடைக்கால உத்தரவாவது பிறப்பிக்கப்பட்ட பிறகு, நிலச்சுவான்தார் உத்தரவுசெய்யப்பட்ட பிரதி பலனைக் கொடுக்க சக்தியற்றவராயிருந்தாலும் இஷ்டப்படாவிட்டாலும், அவர்-குடிக்கூலிக்கிருப்பவர் நிலத்தை அனுபவிப்பதற்காக நியாயமான ஒரு வாடகையை நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்று டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம் ; அதன்மேல், கோர்ட்டார் - நியாயமெனத் தாங்கள் கருதும் வாடகையைத் தங்கள் உத்தரவுமூலமாய் நிஷ்கரிஷை செய்யவேண்டும் :

ஆனால், நிலத்துக்காக முன்னே கொடுக்கத்தக்கதாயிருந்த வாடகையை ரூபாய் ஒன்றுக்கு 2 அணாவுக்கு மேற்பட்டு அதிகப்படுத்தக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உத்தரவு பிறப்பிக்கப்படுவதன்மேல், 4-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவு ரத்தாய்விட்டதாகக் கருதப்படும்.

குடிக்கூலிக்கிருப்பவரை அப்புறப்படுத்தவேண்டுமென்றாவது வாடகையை நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்றாவது நிலச்சுவான்தார்விண்ணப்பம் செய்துகொள்வது.

7. யாதொரு நிலச்சுவான்தார் - குடிக்கூலிக்கிருப்பவர் நிலத்தை அனுபவிப்பதற்காக நியாயமான ஒரு வாடகையை நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்று, அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியத்தைப் பிடிக்க அதிகாரமுள்ள கோர்ட்டாருக்காவது ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டாருக்காவது மனுமூலமாக விண்ணப்பம் செய்துகொள்ளலாம் ; அதன்மேல், கோர்ட்டார்-நியாயமெனத் தாங்கள் கருதும் வாடகையைத் தங்கள் உத்தரவு மூலமாய் நிஷ்கரிஷை செய்யவேண்டும் :

ஆனால், நிலத்துக்காக முன்னே கொடுக்கத்தக்கதாயிருந்த வாடகையை ரூபாய் ஒன்றுக்கு 2 அணாவுக்கு மேற்பட்டு அதிகப்படுத்தக்கூடாது.

6-வது, 7-வது பிரிவுகளின்படிக்கான உத்தரவினால் இன்னது ஏற்படுமென்பது.

1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

8. 6-வது பிரிவின்படியாவது 7-வது பிரிவின்படியாவது யாதொரு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது - யாதொரு வியாஜ்ஜியத்தில் பிறப்பிக்கப்படும் டிக்ரியைப் போலவே செலாவணியாகும் ; மேலும், ஐந்து வருஷ காலம்வரையில் அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட வாடகையைப் புனராலோசனை செய்து மாற்றவுங் கூடாது, மேற்படி கால அளவில் குடிக்கூலிக்கிருப்பவர் வெளிப்படுத்தப்படுவதற்கு உள்ளாகவுமாட்டார்.

நிலத்தை விற்கும்படி நிலச்சுவான்தாருக்குக் கட்டளையிடவேண்டுமென்று கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது.

9. (1) யாதொரு குடிக்கூலிக்கிருப்பவர் 3-வது பிரிவின்படி பிரதிபலன் பெற பாத்தியதையுடையவராயிருந்து, அவருக்கு விரோதமாய் நிலச்சுவான்தாரால் அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியம் தொடரப்பட்டாவது 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்ட் 41-வது பிரிவின்படிக்கான நடவடிக்கை நடத்தப்பட்டாவதிருந்தால், அவர் - இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதிக்குப் பிறகு பதினைந்து தினங்களுக்குள்ளாகிலும் தமக்கு ஸம்மன்

சேர்ப்பிக்கப்பட்ட பிறகு பதினைந்து தினங்களுக்குள்ளாகிலும், கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் விலைக்கு நிலத்தை விற்கும்படி நிலச்சுவான்தாருக்குக் கட்டளையிட்டு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். கோர்ட்டார் - உத்திரவின் தேதியன்று ஷை நிலத்தின் ஊர்விலைப் பிரகாரம் விலையை நிஷ்கரிஷை செய்வதுமல்லாமல், உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குக் குறையாமலும் மூன்று வருஷத்துக்கு மேற்படாமலும் கோர்ட்டார் நிச்சயிக்கும் ஒரு கால அளவுக்குள் குடிக்கூலிக்கிருப்பவர் கோர்ட்டிலாவது கட்டளையிட்டிருக்கும் வேறே விதமாகவாவது அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட விலையை வட்டியுடனே வட்டியில்லாமலோ ஒரு தவணையாகவாகிலும் பல தவணைகளாகவாகிலும் செலுத்தவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கவும்வேண்டும்.

(2) குடிக்கூலிக்கிருப்பவர் ஏதாவதொரு தவணைத் தொகையைச் செலுத்தத் தவறிப் போகிற பட்சத்திலே, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான விண்ணப்பம் தள்ளுபடியானதாகும்; ஆனால், போதுமான காரணம் காட்டப்படுவதன்மேல், கோர்ட்டார் - காலதாமதம் ஏற்பட்டது விஷயமாய் மன்னித்து, பணம் செலுத்துவதற்கான கால அளவு மேலே சொல்லப்பட்ட மூன்று வருஷத்துக்கு மேற்படாதபடி தங்களுக்கு யுக்தமாகத் தோற்றக்கூடிய உத்தரவு பிறப்பிக்கலாம். ஷை விண்ணப்பம் தள்ளிவிடப்படுவதன்மேல், கோர்ட்டார் - குடிக்கூலிக்கிருப்பவரால் தவணைத் தொகை அல்லது தவணைத் தொகைகள் ஏதாகிலும் செலுத்தப்பட்டிருந்தால் அந்தத் தொகையை வட்டி எதுவுமில்லாமலே அவருக்கு வாபஸ் செய்துவிடும்படி உத்தரவு செய்யவேண்டும்.

(3) ஷை விலை செலுத்தப்படுவதன்மேல், கோர்ட்டார் - நிலச்சுவான்தார் குடிக்கூலிக்கிருப்பவருக்கு நிலத்தை ஒப்படைக்கவேண்டுமென்று கட்டளையிட்டு முடிவான உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட உத்தரவு செய்யப்படுவதன்மேல், ஷை வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கை தள்ளுபடியானதாகும்; மேலும், அதில் பிறப்பிக்கப்பட்டிருந்தும் நிறைவேற்றப்படாமலிருக்கிற அப்புறப்படுத்துவதற்கான யாதொரு உத்தரவோ அல்லது டிக்ரியோ ரத்தாகும்.

விவரணம்.—'நிலம்' என்பது - நிலச்சுவான்தாருக்கு நிலத்திலிருக்கும் உரிமையும் எந்த அதிகாரத்தினாலாவது அவர் ஒப்படைக்கக்கூடிய மற்ற சகல உரிமைகளும் என்று அர்த்தமாகும்.

சில வியாஜ்ஜியங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் 4, 5, 6, 8-வது பிரிவுகளைப் பிரயோகிப்பது.

10. (1) அப்புறப்படுத்தப்படுவதற்காகத் தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களும் 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 41-வது பிரிவின்படிக்கான விண்ணப்பங்களும் இன்னும் பைசலாகாமலிருந்தாலும், அவைகளில் அப்புறப்படுத்தப்படுவதற்கான டிக்ரிகளாவது 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 43-வது பிரிவின்படிக்கான உத்தரவுகளாவது பிறப்பிக்கப்பட்டிருந்து இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குமுன் நிறைவேற்றப்படாமலிருந்தாலும் அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களின் விஷயத்திலும் விண்ணப்பங்களின் விஷயத்திலும் 4, 5, 6, 8-வது பிரிவுகள் பிரயோகப்படும்.

1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

(2) அப்புறப்படுத்தப்படுவதற்காக டிக்ரிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கும் வியாஜ்ஜியங்களில், செலுத்தவேண்டிய பிரதிபலன் தொகையை குடிக்கூலிக்கிருப்பவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் (டிக்ரிகளை) நிறைவேற்றுகையில் நிச்சயிக்கவேண்டியதுமல்லாமல், 4-வது பிரிவை அனுசரித்து புதிதாய் ஒரு டிக்ரி பிறப்பிக்கவும்வேண்டும்.

(3) 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 43-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போது நிறைவேற்றப்படாமலிருக்கும் விஷயங்களிலே, கோர்ட்டார் - குடிக்கூலிக்கிருப்பவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்த உத்தரவுகளை ரத்துசெய்து, பிரதிபலன் தொகையை நிச்சயித்தறிந்து, 4-வது பிரிவின்படி இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பிக்கவேண்டும்.

1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

குடிக்கூலிக்கிருப்பவர்களின் மேல் வியாஜ்ஜியங்கள் தொடருவதற்காவது அவர்களுக்கு விரோதமாக விண்ணப்பங்கள் செய்துகொள்வதற்காவது முன்பாக நோடிஸ் கொடுப்பது.

11. நிலத்தையும் கட்டிடத்தையும் சுவாதீனத்தில் வைத்திருப்பதை விட்டுவிடவேண்டுமென்றும் கட்டிடத்திற்காகவும் மரங்கள் எவையேனுமிருந்தால் அவைகளுக்காகவும் பிரதிபலன் கொடுப்பதாகவும், அதன் தொகை இவ்வளவென்றும் கண்டு எழுத்துமூலமான நோடிஸ் குடிக்கூலிக்கிருப்பவருக்குக் கொடுத்தானபிறகு அடுத்த மூன்று மாதம் கழிகிறவரையில் அவருக்கு விரோதமாக, அப்புறப்படுத்தப்படுவதற்கான வியாஜ்ஜியங்கள் தொடரவாவது, 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 41-வது பிரிவின்படிக்கான விண்ணப்பங்கள் செய்துகொள்ளவாவது கூடாது.

1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

அப்படிப்பட்ட நோடீஸின் பிரதி ஒன்றை சென்னை நகர்விசாரணைச்சங்கத்தின் கம்மிஷனருக்கு அதே சமயத்தில் அனுப்பவேண்டும்.

குடிக்கூலிக்கிருப்பவர்களால் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களினால் இன்னது உண்டாகுமென்பது.

12. குடிக்கூலிக்கிருப்பவரால் செய்துகொள்ளப்படும் யாதொரு ஒப்பந்தத்திலுள்ள தெதனாலும், அவருக்கு இந்த ஆக்டின்படிக்குள்ள உரிமைகள் நீங்கிவிடவுமாட்டா, அவை மட்டுப்படுத்தப்படவுமாட்டா; ஆனால், கட்டிடங்கள் கட்டிக்கொள்வது விஷயமாய் குடிக்கூலிக்கிருப்பவரால் எழுதி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட எந்த இட்டங்களுக்கும், அவை ஒப்பந்தத்தின் தேதிக்குப் பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்குச் சம்பந்தப்படுகிற வரையில் இதில் கண்டதெதனாலும் பாதகம் ஏற்படமாட்டாது.

1882-ம் வருஷத்து 4-வது ஆக்ட். சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டைப் பிரயோகப்படுத்துவது விஷயமாய் வரையறை.

13. சென்னை ராஜதானிப் பட்டணத்துக்குப் பிரயோகப்படும் விஷயத்தில், சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான 1882-ம் வருஷத்து ஆக்டானது இந்த ஆக்டின் நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமாயுள்ள அளவுக்கு ரத்து செய்யப்பட்டிருப்பதாகவோ திருத்தப்பட்டிருப்பதாகவோ கருதப்படும்.

ஆர். ராமசந்திர ராவ்,

கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.